[12th March 1965

புலவர் கா. கோவிந்தன்: புதிய நஞ்சை ஆயக்கட்டுகள் கொண்டு வரக்கூடாது என்பது அரசாங்கத்தின் கொள்கை என்று கூறப்படுகிறது.

கனம் சபாநாயகர் : கொள்கை எங்கே இருக்கிறது ? The hon. Member may put a question like this: "Is it the Government's policy that no new Nanja ayacuts should be created?"

புலவர் கா. கோவிந்தன் : இப்போது புதிய ஏரிகள் வெட்டுவதற்கு அனுமதி தரப்பட்டிருப்பதாகத் தெரிகிறது. புதிய நஞ்சை ஆயக்கட்டுகள் வேண்டாம் என்பது அரசாங்கத்தின் கொள்கையா ?

கனம் திரு பூ. கக்கன் : எங்கெல்லாம் புதிய ஏரிகள் உண்டுபண்ண வேண்டுமோ, புஞ்சையாயிருப்பதை நஞ்சையாக ஆக்குவதற்கும், தண்ணீர் இல்லாத இடங்களில் புதிய ஏரிகள் உண்டாக்கவும் அரசாங்கம் ஏற்பாடு செய்கிறது.

ஆம்பூரில் தீயணைக்கும் படை

*219 கேள்வி.—**திரு. ர. சம்பங்கி :** கனம் உள்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) ஆம்பூரில் தீயணைக்கும் படை அமைக்கும் திட்டம் ஏதேனும் அரசாங்கத்தின் பரிசீலனையிலிருக்கிறதா ?

(இ) ஆம் எனில், அத்திட்டம் நடைமுறைக்கு வர எவ்வளவு காலமாகும் ?

கனம் திரு பூ. கக்கன் : (அ) ஆம்.

(இ) தற்பொழுது பிரையாரிட்டி லிஸ்டின்படி (priority list) வேறு சில இடங்களில் முதலில் தீயணைக்கும் நிலையங்கள் ஏற்படுத்திய பிறகுதான் ஆம்பூரில் ஒரு நிலையத்தை ஏற்படுத்தவேண்டும். இதனால் இதை ஏற்படுத்த இன்னும் கொஞ்ச காலம் செல்லும்.

திரு. ஜே. மாதா கவுடர் : ஒவ்வொரு பஞ்சாயத்து யூனியன் வட்டாரத்திலும் ஒரு தீயணைப்பு படையை ஏற்படுத்துவதற்கு ஏதாவது திட்டம் உண்டா ?

கனம் திரு. பூ. கக்கன் : ஒவ்வொரு பஞ்சாயத்து யூனியனிலும் ஒரு தீயணைக்கும் படையை ஏற்படுத்த வேண்டுமென்று திட்டம் கிடையாது. பெரிய நகரங்களாக இருந்தால் "ப்ரையாரிடி" கொடுத்து தீயணைக்கும் படையை அமைக்க அரசாங்கம் ஏற்பாடு செய்யும்.

திரு. ஜே. மாதா கவுடர் : முன்பு பெரிய நகரங்கள், பெரிய முனிசிபாலிடி போன்ற இடங்களிலே தீயணைக்கும் படை வைத்து கொண்டு இருக்கிறோம். தற்போது தொழிற்சாலை அமைக்க கிராமப் புறங்களிலே அதிகமாக லைசன்ஸ் கொடுத்து இருப்பதால், கிராமப் புறங்களிலே தொழிற்சாலைகள் ஏற்படக்கூடிய காரணத்தால், ஒவ்வொரு பஞ்சாயத்து யூனியனிலும் தீயணைக்கும் படை வைக்க அரசாங்கம் மறு பரிசீலனை செய்யுமா ?

கனம் திரு. பூ. கக்கன் : எங்கெல்லாம் தொழிற்சாலைகள் அதிகமாக இருக்கிறதோ எங்கெல்லாம் ஜனத்தொகை அதிகமாக இருக்கிறதோ எங்கெல்லாம் தீ விபத்துகள் அதிகமாக ஏற்படுகிறதோ அங்கெல்லாம் "ஃபயர் ஸ்டேஷன்" வைப்பதற்கு அரசாங்கம் ஏற்பாடு செய்யும்.

12th March 1965]

திரு. எ. கோ. பாலகிருஷ்ணன். : திண்டிவனத்தில் ஏற்பட இருக்கிற தீயணைக்கும் படை எந்த நிலையில் உள்ளது ?

கனம் திரு. பூ. கக்கன் : திண்டிவனத்தில் ஏற்படுத்துவதற்கு அரசாங்கம் முடிவு செய்திருக்கிறது.

பஞ்சாயத்துத் தேர்தல்கள் பற்றி மாநில அரசினரின் கருத்துக்கள்

*220 கேள்வி.—**புலவர் கா. கோவிந்தன் :** கனம் தல நிர்வாக அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப்பாரா—

ஊராட்சி மன்றத் தேர்தல் முறை பற்றி ஆராய்ந்து முடிவு கூற, உயர்திரு. சந்தானம் அவர்கள் தலைமையில் அமைக்கப்பட்ட குழுவின் முன் நம் மாநில அரசு எடுத்து வைத்த கருத்துக்கள் அடங்கிய அறிக்கையின் நகல் ஒன்று சபை முன் வைக்கப்படுமா ?

கனம் திரு. சே. ம. அ. மஜீத் : திரு. கே. சந்தானம் அவர்களின் தலைமையில் அமைக்கப்பட்ட பஞ்சாயத்து ஆட்சித் தேர்தல் குழுவின் முன் இந்த மாநில அரசாங்கத்தின் கருத்துக்கள் அடங்கிய அறிக்கை எதுவும் வைக்கப்படவில்லை.

திரு. செ. மாதவன் : நம்முடைய அரசாங்கம் அந்தக் குழு இங்கு வந்திருந்தபோது என்னென்ன விவரங்களைக் கொடுத்தது ?

கனம் திரு. சே. ம. அ. மஜீத் : பஞ்சாயத்துத் தேர்தல்கள் நல்ல முறையிலே நடைபெறுகிறதா, என்னென்ன அடிப்படைகளின் மீது இந்த மாநிலத்தில்பஞ்சாயத்துத் தேர்தல்கள் நடைபெறுகின்றன, விதிகள் அனுஷ்டிக்கப்படுகிறதா, என்றெல்லாம் கேட்டார்கள். எல்லா விவரங்களையும் சொன்னோம். மூன்று ஆண்டுகளுக்கா, ஐநது ஆண்டுகளுக்கா, ரகசிய வோட்டு முறை, இது பற்றிய பல பிரச்னைகளை விவாதித்தார்கள். தனிக் கேள்வி போட்டால் என்ன விவரம் சொல்ல முடியுமோ விடை அளிக்கிறேன். பொதுவாக ஒரு மணி நேரம் விவாதம் நடந்தது.

திரு. ஜே. மாதா கவுடர் : தற்போது நடந்த பஞ்சாயத்துத் தேர்தலில் ஒரு வார்டுக்கு இரண்டு, மூன்று பேர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கிறார்கள். அடுத்த பஞ்சாயத்துத்தேர்தலிலாவது இம்மாதிரி இல்லாமல் ஒரு வார்டுக்கு ஒருவரைத் தேர்ந்தெடுக்க ஏற்பாடு செய்ய அரசாங்கம் பரிசீலனை செய்யுமா?

கனம் திரு. சே. ம. அ. மஜீத் : அடுத்த தேர்தல் வரும்போது இந்த பிரச்னை சிந்திக்கக்கூடிய விஷயம். இப்போது ஒன்றும் செய்வதற்கு இல்லை.

திரு. செ. மாதவன் : டிஸ்டிரிக்ட் டெவலப்மெண்ட் கௌன்சில் சேர்மனை தேர்தல் முறையிலே தேர்ந்தெடுத்து கொண்டுவரவேண்டுமென்ற கருத்தை அந்தக் குழு நம் அரசாங்கத்திடம் பரிசீலிக்கும்படி கேட்டுக்கொண்டதா ? பஞ்சாயத்து யூனியன் தலைவரையும் நேரடியாகத் தேர்ந்தெடுக்க அரசாங்கத்தின் கருத்தைத் கேட்டதா ?

கனம் திரு. சே. ம. அ. மஜீத் : நமது மானிலத்திலே எந்தெந்த முறையிலே தேர்தல் நடத்தப்படுகிறது, விதிகள் என்ன என்பதைப் பற்றிக் கேட்டார்கள். நாங்கள் எல்லாவற்றிற்கும் பதில் சொன்னோம். அவர்கள் கருத்து என்ன என்பதை அவர்கள் கூறவில்லை.

திரு. ம. கமலநாதன் : தலைவர் அவர்களே, இப்போது நடைபெற இருககிற ஊராட்சிமன்றத்தலைவர் தேர்தலுக்கு முன்பாக, காலியாக இருக்கும் பஞ்சாயத்து உறுப்பினர்களுக்கான தேர்தல் நடைபெறுமா என்று அறிய விரும்புகிறேன்.

கனம் திரு. சே. ம. அ. மஜீத் : அநேகமாக நடைபெறலாம்.